சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 17162/E/2024 & SA 17161/E/2024**

திரு.A.தனசேகர் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர்
வட்டம், சென்னை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

******

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.A.தனசேகர் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜரானார். |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு.தயாளமூர்த்தி, வட்ட சார் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், பெரம்பூர் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 26.02.2024 |
| **கோரிய தகவல்**, மனுதாரர் இ சேவை மூலம் பட்டா மாற்றம் வேண்டி 05.10.2021-ல் (விண்ணப்பம் எண்.2021/0153/02/011914) விண்ணப்பித்ததாகவும், பட்டா வேண்டி விண்ணப்பித்து எவ்வளவு நாட்களுக்குள் மாறுதல் பெற்று கிடைக்கும், நான் அளித்த 12.10.2023 மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் உள்ளிட்ட 4 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், புரசைவாக்கம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். மேற்படி மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை | |

| | |
|---|---|
| வட்டாட்சியர், பெரம்பூர் வட்டம் அவர்களின் 23.04.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட சார் ஆய்வாளர், பெரம்பூர் வட்டம், சென்னை அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன் விபரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 06.04.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | ஒ.மு.எண்.ஜே4/e-1947568/2024, நாள் 13.06.2024 |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 04.07.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள 4 இனங்களுக்கான தகவல்களுக்கு தங்கள் அலுவலக ந.க.எண்.அ1/590/2024, நாள் 22.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- மனுதாரர், இவ்வழக்கில் தான் கோரிய 4 இனங்களுக்கான தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் முழுமையான தகவல்கள் அல்ல எனவும், வழங்கப்பட்ட தகவல்களில் இனம் 1-க்கான தகவல் போதிய தகவல் எனவும், ஏனைய இனம் 2, 3 மற்றும் 4-க்கு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல எனவும் எடுத்துரைக்கிறார்.

2. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) மனுதாரர் ஒரே தேதியிட்டு ஒரே விதமான தகவல்களை வழங்கக் கோரி இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ள இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது வழக்கு எண்கள் SA 17162/E/2024 & SA 17161/E/2024-ஆக பதிவு செய்யப்பட்டு, இன்று ஒருசேர விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

b) மேலும், மேற்கண்டவாறு மனுதாரர் இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ள இரண்டு மேல்முறையீட்டு மனுக்களுடன் இரண்டு தேதிகளிட்ட (26.02.2024 மற்றும் 27.02.2024) இரண்டு சட்டப் பிரிவு 6(1) மனுக்களை இணைத்து அனுப்பியுள்ளார். அதில் 26.02.2024 தேதியிட்ட மனுவில் 4 இனங்களுக்கான தகவல்களை வழங்கக் கோரியும், 27.02.2024 தேதியிட்ட மனுவில் 6 இனங்களுக்கான தகவல்களை வழங்கவும்கோரியுள்ளார்.

c) மேலும், இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் 26.02.2024 தேதியிட்ட மனுவினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கோரியதன் அடிப்படையில், 26.02.2024 தேதியிட்ட மனு மீது (4 இனங்களுக்கான தகவல் கோரிய மனு மீது) விசாரணை மேற்கொள்ளப்பட்டது).

d) மனுதாரரின் 26.02.2024 தேயிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவிற்கு 22.11.2025 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக வழங்கப்பட்டுள்ள தகவல்களில் இனம் 1-க்கு வழங்கப்பட்ட தகவல் போதிய தகவல் எனவும், ஏனைய இனம் 2, 3 மற்றும் 4-க்கு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் அல்ல எனவும் மனுதாரர் எடுத்துரைத்த வாதத்தினை ஆணையம் பதிவு செய்கிறது.

e) எனவே, **பொதுத் தகவல் அலுவலர்/ வட்ட சார் ஆய்வாளர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கில் மனுதாரர் கோரியுள்ள இனம் 2, 3 மற்றும் 4-க்கான உரிய தகவல்களை சட்டப் பிரிவு 7(6)-ன்கீழ், கட்டணம் ஏதுமின்றி**, <u>அலுவலக முத்திரையுடன் கூடிய சான்றொப்பத்துடன்,</u> ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.**

f) <u>மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், பெரம்பூர் அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது</u>:-

I. மனுதாரரின் 26.02.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு, <u>வரையறுக்கப்பட்ட 5 தினங்களுக்குள் சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனுவினை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பிற்கு மாற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்</u>,

II. மேற்படி 26.02.2024 தேதியிட்ட மனுதாரர் மனுவினை சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் பெற்றுக்கொண்டு, <u>மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்/ வட்டசார் ஆய்வாளர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்</u> பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை <u>இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்</u> வாயிலாக இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

g) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 17162/E/2024 & SA 17161/E/2024**
**பெறுநர்**

வட்டாட்சியர்/ முதல் மேல்முறையீட்டு அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
வட்ட சார் ஆய்வாளர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பெரம்பூர் வட்டம், சென்னை மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.A.தனசேகர், த/பெ.ஆறுமுகம் (எ) கஜேந்திரன்,
எண்.1, M.M. கார்டன்,
ஸ்டிபன்சன் ரோடு, வியாசர்பாடி, சென்னை - 600 039.

Copy to: File MP/PA-